மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 31—3—68 தேதி அன்றைய நிலவரப்படி, 2 சதவீதத்திலிருந்து 7 சதவீதம் வரை பங்குத் தொகையிலும், தணிக்கைக் கட்டண வகையிலும் சமய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மொத்தத் தொகை ரூ. 27,85,706-23.

திரு. என். சுந்தரேசத் தேவர்: பிற மத நிறுவனங்களிலும் இப்படிப்பட்ட தொகை வாங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : வேறு மதங்கள் சம்பந்தப்பட்ட தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Loan given by the Life Insurance Corporation of India.

* 334 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the amount given by the Life Insurance Corporation of India to Government of Tamil Nadu to extend Housing facilities in the financial years 1966–67, 1967–68 and 1968–69?

வீட்டு வசதிக்காக ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் கடன்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு அரசுக்கு வீட்டு வசதிக்காக 1966–67, 1967–68, 1968–69-ஆம் நிதி ஆண்டுகளில் இந்திய ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் எவ்வளவு பணம் கொடுத்தது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :

1966–67 ரூ. 125 லட்சம்.

1967–68 ரூ. 150 லட்சம்.

1968–69 ரூ. 150 லட்சம்.

Retirement age of Electricity Board Employees.

* 335 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it has been decided to reduce the age of retirement of employees and officers of the State Electricity Board from 58 years to 55 years; and

(b) if so, the number of persons who will lose their employment thereby ?

மின்சார வாரிய ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மின்சார வாரிய ஊழியர்கள், அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 55 ஆக குறைக்க தீர்மானிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், இதனால் எத்தனை பேர் வேலை இழக்க நேரிடும் ?